[1977 ஆகஸ்ட் 1

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்ற சுங்கவரி வசூலிக்கும்போது கட்டை வண்டிகள், மாட்டு வண்டிகளுக்கு விதிவிலக்கு இருக்கிறது. லாரிகள், டிரக்குகளுக்கு மட்டுந்தான் இந்த வரி வசூலிக்கப்படுகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இது போன்ற வரிகளைத் தொடர்ந்து வசூல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கட்டை வண்டிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியும். லாரி போன்ற வாகனங்களுக்குக் கட்டணம் வசூல் செய்வது தொடர்ந்து அமலில் இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாலங்கள் அமைக்கப்படுகின்றபோது சில நெடுஞ்சாலைகளிலே முதலில் 20 அடி அகலமுள்ள பாலம் கட்டுகிறார்கள். அதற்குப் பிறகு 2, 3 ஆண்டுகள் கழிந்தவுடனே மீண்டும் விஸ்தரிக்கப்படுகிற வேலையை செய்கிறார்கள், இப்படிப்பட்ட போக்கை அரசாங்கம் மாற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினாக்கள் கேட்கின்ற உறுப்பினர்கள் அவர்கள் இடங்களில் இருந்துகொண்டு தான் கேட்கவேண்டும். திரு ரா. கிருஷ்ணன் அவர்களுடைய இடத்திலிருந்து கேள்வி கேட்கவில்லை என்று கருதுகிறேன், வேறு இடத்திலே அமர்ந்து கேட்கிறார்; ஏனென்றால் அதுபற்றி குறிப்பிலே இல்லை. இருந்தாலும் பரவாயில்லை, இனிமேலாவது இருக்கையில் இருந்து கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் + உடுக்குறி இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைப் பிரச்னை.

'அண்ணா' நாளிதழ் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. அன்பழகன், திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் பேரவையின் விதி 184-ன் கீழ் கீழ் குறித்த உரிமைப் பிரச்னையை பேரவையில் கொண்டுவர அனுமதி கேட்டு அறிவிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளார்கள். அது 'அண்ணா' பத்திரிகையில் வந்துள்ள செய்தியைப் பற்றியது.

1977 ஆகஸ்ட் 1] [பேரவைத் தலைவர்]

1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதி அன்று சட்டமன்றப் பேரவையில் திரு. க. அன்பழகன் அவர்கள் உரையாற்றிக்கொண்டு இருந்தபோது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ''............. நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபொழுது தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது. நெருக்கடி நிலையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அங்கீகரித்ததா அல்லது எதிர்த்ததா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்............'' என்று கேட்டபோது, அதற்கு, திரு. அன்பழகன் அவர்கள், ''எங்களைப்பற்றி மத்திய அரசிலே இருந்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த காரணத்தாலே தான் சனவரி 31 வந்தது, ஆகவே, நாங்கள் ஆதரித்திருந்தால் சனவரி 31 வந்திருக்காது'' என்று பதில் அளித்தார்.

இச்செய்தியை அண்ணா நாளிதழ், சென்னை 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதியிட்ட நாளேட்டில், திரு. அன்பழகன் கூறியதாகப் பின்வருமாறு செய்தி போடப்பட்டுள்ளது :

''எங்களைப்பற்றி மத்திய அரசு தெரிந்து வைத்திருந்தது, ஜனவரி 31-ந் தேதி எங்கள் ஆட்சியை நீக்கியது. வேறு ஏதாவது செய்திருந்தால் அதற்கு முன்பே தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது.'' - 'அண்ணா' பத்திரிக்கையில் வந்துள்ள கடைசி சொற்றொடர்கள் 'வேறு ஏதாவது செய்திருந்தால் அதற்கு முன்பே தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது' என்பவை அவைக் குறிப்பேட்டில் இல்லை.

இது எப்படி அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் படிக்கிறபோது அப்படிப்பட்ட உரிமை மீறப்பட்டிருக்கிறது என்று படித்துக் காட்டினீர்கள். எனக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்பதால் என்னைப் பேசச் சொல்லியிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஜனவரி 31-ஆம் தேதி அன்றைக்கு இருந்த ஆட்சி கலைக்கப்பட்டு, சட்டமன்றம் கலைக்கப்பட்டது என்பது மத்திய அரசு கொண்டு வந்த நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கு இந்த அரசு மாறாக இயங்கியதினுடைய விளைவுதான் என்ற கருத்தை நான் சொன்னேனே தவிர, மத்திய அரசினுடைய அவசரநிலைப் பிரகடனத்தை நாங்கள் எதிர்த்து இருந்தால் எங்கள் ஆட்சி அதற்கு முன்னாலேயே கலைக்கப்பட்டு இருக்கும், நாங்கள் வேறு விதமான நடவடிக்கையிலே ஈடுபட்டிருந்தால் ஆட்சி கலைக்கப்பட்டிருக்கும் என்று நான் சொன்னதாக வருகிற கருத்து ஒரு உள்நோக்கத்தை அடக்கிய சொற்றொடராக இருக்கிறது. ..

முதலில், உறுப்பினர் வெளியிடாத கருத்தை பத்திரிகை வெளியிடுவது நியாயமல்ல. இரண்டாவது, சொல்லப்பட்ட கருத்துக்கு மாறான கருத்தை வெளியிடுவது என்பது வேண்டுமென்றே செய்யப்படுகிற காரியம். அதுவும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரைத் தாங்கி நடத்தப் படுகின்ற பத்திரிகை என்ற காரணத்தால் அது அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயருக்கே களங்கம் கற்பிப் பதாக அமைகிறது, ஆகவே அதிலே உரிமை மீறப்பட்டு இருக்கிறது என்பதைத் தலைவராகிய தாங்கள் படிக்கிற போதே தெரிவித்து இருக்கிறீர்கள்.

எனவே சட்டமன்றத்திலே குறிப்பிடாததையும், சட்ட மன்றக் குறிப்பேட்டில் இல்லாததையும், நான் நினைக்காததை யும், நான் வெளியிட்ட கருத்திற்கு முரண்பட்ட முறையிலே யும் வெளியிட்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழுக்கு கற்பிப்பதாகவும், குறிப்பாக எனக்கும் இழுக்கு கற்பிப்பதாகவும் இருப்பதால் பேரவைத் தலைவர் அவர்கள் இதிலே உரிமை மீறல் இருக்கிறது என்ற காரணத்தாலே அதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: 'அண்ணா' நாளேட்டில் அவைக் குறிப்புகளில் உள்ள வாக்கியங்கள் அவ்வாறே வெளி யிடப்படா விட்டாலும், திரு. க. அன்பழகன் அவர்கள் கூறிய மையக் கருத்தை வெளியிட்டுள்ளார்கள். உறுப்பினர் கூறியது, தி.மு.க. ஆட்சி அவசர கால நிலையை ஆதரிக்காத காரணத் தினால்தான் சனவரி 31 வந்தது (அதாவது ஆட்சி கலைக்கப் பட்டது) என்றும், ஆகவே நாங்கள் அதை ஆதரித்து இருந்தால் சனவரி 31 வந்து இருக்காது என்றும் கூறியிருக்கிறார். இதுபற்றி நாளிதழ் ஆசிரியரை விளக்கம் கேட்டதற்கு அவரு டைய கடிதத்தில் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார்.

''.......... வேறு ஏதாவது தி.மு.க. ஆட்சி செய் திருந்தால் தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது' என்று வெளிவந்த வார்த்தை உறுப்பினர்கள் பேராசிரியர் திரு. அன்பழகன், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் குறிப்பிட்டதைப் போல எந்த உள்நோக்கத்துடனும் பிரசுரிக்கவில்லை. வார்த் தைகள் மாறினாலும் கருத்து மாறவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.''

''பின்னால் குறிப்பிட்டுள்ள ஒரு வாக்கியம் முன் குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்தும் வகையில்தான் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவையில் அவசர அவசரமாக குறிப்பெடுத்து அன்றே பிரசுரிக் கும் நிலை இருப்பதால் எழுத்துக்கு எழுத்து அப்படியே பிரசுரிக்க முடியாத நிலை இருக்கிறது. இதனால் அவைக்கோ,

TRUTH ALONE TRIUMPHS

உறுப்பினர்களுக்கோ எந்த உள்நோக்கமும் கற்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதில் தவறு இருப்பின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறோம்.''

[முற்பகல் 9-30]

'' வேறு ஏதாவது தி.மு.க. ஆட்சி செய்திருந்தால் தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது '' என்ற சொற்றொடரை உறுப்பினர் பேசவும் இல்லை, அவைக் குறிப்பிலும் இல்லாததால் இம் மாதிரியாகப் பிரசுரிப்பது, உறுப்பினரது கருத்துக்கு வேறுவித மாகப் பொருள் கற்பிப்பதற்கு ஏதுவாக முடிந்துவிடும். ஆகவே, இதுபோன்று அவையில் சொல்லாத சொற்றொடர்களை, உறுப் பினர்கள் வாயிலாகக் கூறுவதுபோல் பத்திரிகைகள், குறிப்பாக 'அண்ணா' பத்திரிகை, வெளியிடாமல் இருக்க வேண்டுமென எச்சரிக்கிறேன்.

3 அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்பு ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றினை திரு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்படுகிறது.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1977-78 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS